ஆழி பப்ளிகேஷன்
மெய்ப்பொருள் காண்பது அறிவு

UNIT - I

15/15

# ஆதி கணிதம்

## TNPSC
GROUP I, II, II(A), IV
New Syllabus



- எளிய முறையில் தீர்வு
- கணிதத்தில் 100% வெற்றி
- புதிய பள்ளிப்பாட புத்தக வினாக்கள்
- Previous Year Questions - (2021-2024)

3000+ பயிற்சி வினாக்கள் விளக்கங்களுடன்



M.Ranjith Prabu
Southern Railway

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
TAF IAS ACADEMY
16 ஆண்டுகளில் 15985+ பேருக்கு அரசுப்பணி / தமிழகம் முழுவதும் 60+ கிளைகள்

# TAF BOOK's

# ஆதி கணிதம்

# திறனறிவு (அலகு – I)

**(அனைத்து போட்டித்தேர்விற்கான No.1 கணிதம்)**

**"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**

**என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க, அழிவில்லாத சிறப்புடைய செல்வம் கல்வியறிவு ஒன்றுதான், என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.**






# பொருளடக்கம்


| வ.எண் | பாடம் | பக்கம் |
|---|---|---|
| 1. | எண்கள் | 01 - 25 |
| 2. | சுருக்குக | 26 – 46 |
| 3. | மீ.சி.ம. , மீ.பொ.வ. | 47 – 80 |
| 4. | எண்ணியல் | 81 – 107 |
| 5. | சராசரி | 108 – 129 |
| 6. | விகிதம் மற்றும் விகிதாச்சாரம் | 130 – 159 |
| 7. | வயது கணக்குகள் | 160 – 178 |
| 8. | சதவீதம் | 179 – 207 |
| 9 | இலாப நட்டக் கணக்குகள் | 208 – 238 |
| 10. | தனி வட்டி | 239 – 265 |
| 11. | கூட்டு வட்டி | 266 – 294 |
| 12. | நேரம் மற்றும் வேலை | 295 – 341 |
| 13. | நேரம் மற்றும் தூரம் | 342 – 361 |
| 14. | இயற்கணிதம் | 362 – 375 |
| 15. | அளவியல் | 376 - 446 |
| 16. | நிகழ்தகவு | 447 – 471 |
| 17. | புள்ளியியல் | 472 – 486 |
| 18. | தகவல்களைக் கையாளுதல் | 487 – 501 |
| 19. | ஒரு வரி வினாக்கள் | 502 - 510 |

# PREVIOUS YEAR QUESTION QR CODES

| S.NO. | TOPIC NAME | QR CODE |
|---|---|---|
| 1. | எண்கள் | |
| | ரோமன் எழுத்துக்கள் | |
| 2. | சுருக்குக | |
| 3. | மீ.சி.ம. , மீ.பொ.வ. (பாகம் – 1 & 2) | |
| | | |
| 4. | எண்ணியல் | |
| 5. | விகிதம் மற்றும் விகிதாச்சாரம் | |
| 6. | சதவீதம் | |
| 7. | இலாப நட்டக் கணக்குகள் | |

| | | |
|---|---|---|
| 8. | தனி வட்டி | |
| 9. | கூட்டு வட்டி | |
| 10. | நேரம் மற்றும் வேலை | |
| 11. | அளவியல் | |
| 12. | நிகழ்தகவு | |

## பாடத்திட்டம் - 2025

### TNPSC GROUP – I, II, IIA, IV SYLLABUS


### UNIT I: APTITUDE / திறனறிவு (15 QUESTIONS)

**Simplification - Percentage - Highest Common Factor (HCF) - Lowest Common Multiple (LCM) - Ratio and Proportion - Simple interest - Compound interest - Area - Volume - Time and Work.**

**சுருக்குதல் விழுக்காடு - மீப்பெரு பொதுக் காரணி (HCF) - மீச்சிறு பொது மடங்கு (LCM); விகிதம் மற்றும் விகிதாச்சாரம்; தனி வட்டி - கூட்டு வட்டி - பரப்பு - கொள்ளளவு - காலம் மற்றும் வேலை.**

QUANTITATIVE APTITUDE

# எண்கள்



**இயல் எண்கள் :** எண்ணக்கூடிய எண்கள் **இயல் எண்கள்.** எ.கா: (N) = $\{1, 2, 3, 4, \ldots\}$

**முழு எண்கள் :** இயல் எண்களுடன் பூஜ்ஜியம் சேர்ந்து வருவது **முழு எண்கள்.**
எ.கா (W) = $\{0, 1, 2, 3, 4, \ldots\}$

**முழுக்கள் :** இயல் எண்கள், குறை எண்கள் மேலும் பூஜ்ஜியம் சேர்ந்த எண்கள் போன்றவற்றின் தொகுப்பே **முழுக்கள்**

(எ.கா): = (Z) = $\{\ldots -3, -2, -1, 0, 1, 2, 3, 4, \ldots\}$

**ஒற்றை எண்கள் :** 2 - ஆல் வகுபடாத எண்கள் **ஒற்றை எண்கள்.** எ.கா : 1,3,5,7, ....

**இரட்டை எண்கள் :** 2 - ஆல் வகுபடும் எண்கள் **இரட்டை எண்கள்.** எ.கா : 2,4,6,8, ....

## பகா எண்

★ ஓர் எண் 1-ஆல் மற்றும் அதே எண்ணால் மட்டும் வகுபட்டால் அது பகா எண் ஆகும்.
★ 1 என்பது பகு எண்ணும் அல்ல பகா எண்ணும் அல்ல.
★ பகா எண்களில் வரக்கூடிய ஒரே இரட்டை எண் 2 மட்டுமே.
★ 2, 3 - ஐ தவிர எல்லா பகா எண்களும் 6 -ன் மடங்கை விட 1 குறைவாகவோ அல்லது அதிகமாகவோ வரும்.

**(எ.கா):** 41 - இது 6 - ன் மடங்கை விட 1 குறைவு.
43 - இது 6 - ன் மடங்கை விட 1 அதிகம்.

**ஒன்று முதல் நூறு வரை 25 பகா எண்கள் உள்ளன அவை :**

**2, 3, 5, 7, 11, 13, 17, 19 , 23 , 29 , 31, 37, 41, 43, 47, 53, 59, 61, 67, 71, 73, 79, 83, 89, 97**

**சார்பகா எண்கள் :** இரு எண்களின் மீ.பொ.வ 1 எனில், அவ்வெண்கள் சார்பகா எண்கள் எனப்படும்.
**எ.கா :** (2, 3), (8, 9), (7, 8)

**இரட்டைபகா எண்கள் :** ஏதேனும் இரு பகா எண்களுக்கு இடைப்பட்ட வித்தியாசம் 2 எனில் அவ்வெண்கள் இரட்டை பகா எண்கள் எனப்படும்.

**எ.கா :** (3, 5), (5, 7), (11, 13)

**செவ்விய எண்கள் :** ஓர் எண்ணின், அந்த எண்ணைத் தவிர்த்து மற்ற காரணிகளின் கூடுதலானது அதே எண்ணை தரும் எனில் அது செவ்விய எண்கள் ஆகும்.

**எ.கா :** 6 -ன் காரணி 1, 2, 3 அதன் கூடுதல் 1 + 2 + 3 = 6

**இணக்கமான எண்கள் :** இரு எண்களில், ஓர் எண்ணின் காரணிகளின் கூடுதலானது மற்றோர் எண்ணை தருமானால் அவை இணக்கமான எண்கள் அல்லது நட்பு எண்கள் எனப்படும்.

**எ.கா :** 220 மற்றும் 284.

## பகு எண்

**பகு எண் :** பகா எண்கள் மற்றும் , 1 - ஐ தவிர மற்ற அனைத்து இயல் எண்களும் **பகு எண்கள்.**

மிகச் சிறிய பகு எண் 4.

மிகச் சிறிய ஒற்றைப் படை பகு எண் 9.

★ இரண்டுக்கும் மேற்பட்ட காரணிகளை கொண்ட எண் பகு எண் எனப்படும்.

### எண்களின் வகுபடும் தன்மை

**2, 5, 10 – ஆல் வகுபடும் தன்மை**

| வகுபடும் | தன்மை |
|---|---|
| 2 - ஆல் | கடைசி இலக்கம் 0, 2, 4, 6, 8 ஆக இருத்தல் |
| 5 - ஆல் | கடைசி இலக்கம் 0 அல்லது 5 ஆக இருத்தல் |
| 10 - ஆல் | கடைசி இலக்கம் 0 ஆக இருத்தல் |

**4 மற்றும் 8 – ஆல் வகுபடும் தன்மை**

| வகுபடும் | தன்மை |
|---|---|
| 4 - ஆல் | கடைசி இரண்டு இலக்கங்கள் 4 ன் மடங்காக இருத்தல் |
| 8 - ஆல் | கடைசி மூன்று இலக்கங்கள் 8ன் மடங்காக ஆக இருத்தல் |

**3, 6, 9, 12 – ஆல் வகுபடும் தன்மை**

| வகுபடும் | தன்மை |
|---|---|
| 3 - ஆல் | இலக்கங்களின் கூடுதல் 3 மடங்காக இருத்தல் |
| 9 - ஆல் | இலக்கங்களின் கூடுதல் 9 ன் மடங்காக இருத்தல் |
| 6 - ஆல் | 2 மற்றும் 3 ஆல் வகுபடும் எண் 6 ஆல் வகுபடும் |
| 12 - ஆல் | 3 மற்றும் 4 ஆல் வகுபடும் எண் 12 ஆல் வகுபடும் |

**11–ஆல் வகுபடும் தன்மை :**


✍ ஓர் எண்ணின் ஒற்றை இலக்க எண்ணின் இலக்கங்களின் கூடுதலுக்கும், இரட்டை இலக்க எண்ணின் இலக்கங்களின் கூடுதலுக்கும் உள்ள வித்தியாசம் 0 ஆகவோ அல்லது 11-ன் மடங்காகவோ இருந்தால் அந்த எண் 11-ஆல் வகுபடும்.

★ பொதுவாக 11-ஆல் வகுபடும் தன்மையை குறிப்பிட்ட வடிவில் உள்ள எண்கள் 11-ஆல் வகுபடும் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம்.

<u>உதாரணமாக:</u> 121, 1331, 4994, 56265, 1234651, 4754574 என்ற எண்கள் 11–ஆல் வகுபடும்.

# QUANTITATIVE APTITUDE

# சுருக்குக



★ கணிதத்தின் தீர்வுகளுக்கு **VBODMAS / VBIDMAS**என்ற விதியை பயன்படுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| **V** | **-** Vinculum / Bar | |
| **B** | - Bracket | அடைப்பு |
| **O/I** | - Of & Order / Indices | இன் |
| **D** | - Division | வகுத்தல் |
| **M** | - Multiplication | பெருக்கல் |
| **A** | - Addition | கூட்டல் |
| **S** | - Subtraction | கழித்தல் |

★ இவ்விதிப்படி முதலில் அடைப்புக்குறிக்குள் இருப்பதற்கு தீர்வு காண வேண்டும்.

★ "of " என்றால் பெருக்கல், மேலும் Order(அடுக்கு) என்று பொருள் அதை முதலில் தீர்க்க வேண்டும்.

அதன் பிறகு வகுத்தல், பெருக்கல், கூட்டல், கழித்தல் என்ற வரிசையில் அடிப்படையில் கணக்குகளை தீர்க்க வேண்டும்

**<u>அடுக்கு விதிகள் :</u>**

- $a^m \times a^n = a^{m+n}$
- $\frac{a^m}{a^n} = a^{m-n}$
- $(a^m)^n = a^{m\times n}$
- $(ab)^n = a^n b^n$
- $\left(\frac{a}{b}\right)^n = \frac{a^n}{b^n}$
- $\frac{1}{a^m} = a^{-m}$

**Mathematics is not about numbers, equations, computations and Algorithms, It is about UNDERSTANDING**

## மாதிரி கணக்குகள்

1. **பின்னங்களின் கூட்டல்:**

சுருக்குக: $\frac{2}{5}+\frac{3}{5}$

a)1 b)2/5 c)3/5 d)1/5

**தீர்வு**

$\frac{2}{5}+\frac{3}{5}=\frac{2+3}{5}=5/5=\mathbf{1}$

**குறிப்பு:**

- பகுதிகள் ஒரே மாதிரியாக இருந்தால் மட்டுமே தொகுதிகளை கூட்டவோ கழிக்கவோ வேண்டும்.
- 2→ தொகுதி, 5→ பகுதி

2. **பின்னங்களின் கழித்தல்:**

சுருக்குக: $\frac{5}{7}-\frac{2}{7}$

a)7/3 b)3/7 c)3 d)7

**தீர்வு**

$\frac{5}{7}-\frac{2}{7}=\frac{5-2}{7}=\mathbf{\frac{3}{7}}$

3. **பின்னங்களின் பெருக்கல்:**

சுருக்குக: $\frac{2}{9}\times\frac{3}{2}$

a) $\frac{1}{3}$ b) $\frac{1}{2}$ c) $\frac{2}{3}$ d) $\frac{1}{4}$

**தீர்வு**

$\frac{2}{9}\times\frac{3}{2}=\frac{6}{18}=\mathbf{\frac{1}{3}}$

பின்னப்பெருக்கலில் பின்னங்களின் பகுதியை பகுதியுடனும் $(9\times 2)$ தொகுதியை தொகுதியுடனும் பெருக்க வேண்டும். $(2\times 3)$

4. **பின்னங்களின் வகுத்தல்:**

சுருக்குக : $\frac{1}{5}\div\frac{3}{7}$

a) $\frac{7}{5}$ b) $\frac{7}{15}$ c) $\frac{1}{15}$ d) $\frac{7}{3}$

**தீர்வு**

ஒரு பின்னத்தை மற்றொரு பின்னத்தால் வகுக்க முதல் பின்னத்தை இரண்டாவது பின்னத்தின் தலைகீழியால் பெருக்க வேண்டும்.

$\frac{1}{5}\div\frac{3}{7}=\frac{1}{5}\times\frac{3}{7}$ (இன் தலைகீழி)

$=\frac{1}{5}\times\frac{7}{3}=\mathbf{\frac{7}{15}}$

முதல் பின்னம் $\frac{1}{5}$, இரண்டாவது பின்னம் $\frac{3}{7}$

இரண்டாவது பின்னத்தின் தலைகீழி $\frac{7}{3}$

5. சுருக்குக. $20+[8\times 2+\{\overline{6\times 3}-10\div 5\}]$

a) 60 b) 15 c) 52 d) 53

**தீர்வு**

$20+[8\times 2+\{\overline{6\times 3}-10\div 5\}]$

BODMAS விதிகளுக்கு முன்பு முதலில் மேற்கோடு செய்யப்பட்டதை தீர்க்கவும்.

$=20+[8\times 2+\{18-10\div 5\}]$
$=20+[8\times 2+\{18-2\}]$
$=20+[8\times 2+16]$
$=20+[16+16]$
$=20+32=\mathbf{52}$

6. சுருக்குக: $1-[1-\{1-(1-\overline{1-1})\}]$

a) 0 b) 1 c) 2 d) 3

**தீர்வு**

மேல்கோடிட்ட உறுப்புகளை சுருக்கிய பின்பு BODMAS விதிகளை பயன்படுத்துக.

$=1-[1-\{1-(1-0)\}]$
$=1-[1-\{1-1\}]$
$=1-[1-0]$
$=1-1=\mathbf{0}$

7. $\frac{4+4\times 18-6-8}{123\times 6-146\times 5}=?$

a) 6 b) 2 c)6.65 d)7.75

**தீர்வு**

$=\frac{4+72-6-8}{738-730}$

$=\frac{76-14}{8}=\frac{62}{8}=\mathbf{7.75}$

8. 10,000 ÷ 100 ÷ 10 = ?

a) 10 b) 0.1 c) 1000 d) 100

**தீர்வு**


வகுத்தல் (÷) கொடுக்கப்பட்டபின் அதற்கு அடுத்துள்ள எண்களின் தலைகீழியிட்டு பெருக்க வேண்டும்.

$=10000\times\frac{1}{100}\times\frac{1}{10}$

**= 10**

QUANTITATIVE APTITUDE

# சராசரி



- சராசரி = $\frac{\text{மொத்தம்}}{\text{எண்ணிக்கை}}$
- முதல் n இயல் எண்களின் சராசரி = $\frac{(n+1)}{2}$
- முதல் n ஒற்றைப்படை எண்களின் சராசரி = $n$
- முதல் n இரட்டைப்படை எண்களின் சராசரி = $(n+1)$
- அடுத்தடுத்த எண்களின் சராசரி = $\frac{\text{முதல் எண் + கடைசி எண்}}{2}$
- 1-லிருந்து n வரை உள்ள ஒற்றைப்படை எண்களின் சராசரி = $\frac{\text{கடைசி ஒற்றைப்படை எண் + 1}}{2}$
- 1 முதல் n வரை உள்ள இரட்டைப்படை எண்களின் சராசரி = $\frac{\text{கடைசி இரட்டைப்படை எண் + 2}}{2}$

'n' மடங்கு உடைய எண்களின் சராசரி = $\frac{\text{எண் }\times(n+1)}{2}$

சராசரி வேகம் $= \frac{2xy}{x+y}\ km/hr$ (தூரங்கள் சமம்), $\frac{3xyz}{xy+yz+zx}\ km/hr$ (தூரங்கள் சமம்)

சராசரி வேகம் $= \frac{\text{மொத்த தூரம்}}{\text{மொத்த நேரம்}}$ (தூரங்கள் சமம் அல்ல)

## எளிய முறை

★ **அடுத்தடுத்த / தொடர்ச்சியாக/இயல்** எண்களின் சராசரியை காண அந்த தொடரில் நடுவில் உள்ள எண்ணின் மதிப்பை கண்டறிந்தால் போதுமானது. (அல்லது) சராசரி = $\frac{\text{மிக சிறிய எண் + மிக பெரிய எண்}}{2}$

**உதாரணமாக :**

63, 66, 69, 72, 75 (அ) $\frac{63+75}{2} = 69$

- பிழைகள் காரணமாக சராசரி குறைந்திருந்தால் திருத்தப்பட்ட

  புதிய சராசரி = சராசரி + $\frac{\text{வித்தியாசம்}}{\text{எண்ணிக்கை}}$

- பிழைகள் காரணமாக சராசரி கூடியிருந்தால் திருத்தப்பட்ட

  புதிய சராசரி = சராசரி - $\frac{\text{வித்தியாசம்}}{\text{எண்ணிக்கை}}$

## மாதிரி கணக்குகள்

1. 33,26, 15, 13, 43 என்ற எண்களின் சராசரி காண்க

a) 36 **b) 26** c) 46 d) 56

**Solution**

$$\text{சராசரி} = \frac{\text{மொத்தம்}}{\text{எண்ணிக்கை}}$$

$$= \frac{33+26+15+13+43}{5} = \frac{130}{5} = 26.$$

எண்களை கூட்டி அந்த தொகையினை எண்ணிக்கையினால்வகுக்க கிடைப்பது சராசரி ஆகும்.

2. 24 முதல் 30 வரையுள்ள எண்களின் சராசரி காண்க.

a) 29 b) 28 **c) 27** d) 26

**Solution**

24 முதல் 30 வரை உள்ள எண்கள்.

24, 25, 26, **27** 28, 29, 30

இதில் மொத்தம் 7 எண்கள் உள்ளன. அதில் நடுவில் உள்ள எண் 27 ஆகும். எனவே அதன் சராசரி **27**

3. 11 அடுத்தடுத்த இயல் எண்களின் சராசரி 145 எனில் அதில் மிகச்சிறிய எண் யாது?

a) 138 **b) 140** c) 142 d) 145

**Solution**

அடுத்தடுத்த எண்களின் சராசரி அத்தொடர் வரிசையில் நடுவில் உள்ள எண்ணே அதன் சராசரி கொடுக்கப்பட்டுள்ள கணக்கில் சராசரி 145 ஆகும் எனவே 145 - அத்தொடர் வரிசையின் மைய எண் ஆகும். அத்தொடர் வரிசையில் மொத்தம் 11 எண்கள் உள்ளதாக கூறப்பட்டுள்ளது. எனவே 145 - ஐ மையஎ ண்ணாக வைத்துவிட்டு முன்னர் 5 எண்களும், பின்னர் 5 எண்களும் இருந்திருக்க வேண்டும்.

140, 141, 142, 143, 144, **145**, 146, 147, 148, 149, 150

இத்தொடரில் மிகச்சிறிய எண் 140 ஆகும்.

4. அடுத்தடுத்த 8 இயல் எண்களின் சராசரி 64.5 எனில் அதில் மிகப் பெரிய எண் யாது?

**a) 68** b) 65.5 c) 67 d) 68.5

**Solution**

சராசரியை நடுவில் அமைத்து அதற்கு முன்னர் 4 எண்களும் பின்னர் 4 எண்களும் அமைத்து தொடரை முழுமை செய்து அதில் மிகப்பெரிய எண் காண வேண்டும்.

61, 62, 63, 64 **64.5**, 65, 66, 67, 68

அத்தொடரில் மிகப்பெரிய எண் 68 ஆகும்.

5. அடுத்தடுத்த 6 இரட்டைப்படை எண்களின் சராசரி 247 எனில் அதில் மிகப்பெரிய எண் மற்றும் மிகச்சிறிய எண்ணின் கூடுதல் யாது?

a) 500 b) 498 c) 496 **d) 494**

**Solution**

**சராசரியை நடுவில் அமைத்து அதற்கு முன்னர் 3 எண்களும் பின்னர் 3 எண்களும் அமைக்க வேண்டும்.**

242, 244, 246, **247**, 248, 250, 252

இத்தொடரில் மிகச்சிறிய எண் = 242

மிகப்பெரிய எண் = 252

இரண்டு எண்களின் கூடுதல் = 494

6. A, B, C மற்றும் D ஆகிய அடுத்தடுத்த 4 எண்களின் சராசரி 56.5 ஆகும். எனில் A மற்றும் C ஆகியவற்றின் பெருக்குத் தொகை எவ்வளவு?

a) 3363 b) 3306 **c) 3135** c) 3080

**Solution**

$$\text{சராசரி} = \frac{x+x+1+x+2+x+3}{4} = 56.5$$

$=> 4x + 6 = 56.5 \times 4$

$=> 4x + 6 = 226$

$4x = 226 - 6$

$4x = 220$

$x = \frac{220}{4}$ ; $x = 55$

$A = 55 \quad C = 57$

A, C ன் பெருக்குத் தொகை $55 \times 57$

$= 3135$

**மற்றொரு முறை**

சராசரியை மைய எண்ணாக வைத்து முன்பக்கம் 2 எண்களும் பின்பக்கம் 2 எண்களும் அமைக்க வேண்டும்.

55, 56, **56.5** 57, 58

அடுத்தடுத்த 4 எண்கள் = 55, 56, 57, 58.


இவற்றை A,B,C,D என குறிப்பிடலாம்.

A மற்றும் C பெருக்குத் தொகை

$A \times C = 55 \times 57 = 3135$

QUANTITATIVE APTITUDE

# சதவீதம்



✍ சதவீதம் என்பது 100க்கு எத்தனை என்பதை குறிக்கும். ஒரு மதிப்பை அதன் மொத்த மதிப்புடன் ஒப்பிட்டு அதை நூற்றுக்கு என மாற்றி கூறுவதே சதவீதம் ஆகும். (எ.கா) 5% என்பதை $\frac{5}{100}$ என எழுத வேண்டும்.

$x$ எனும் ஓர் எண்ணானது $y$ % அதிகரிக்கிறது (அல்லது) குறைகிறது எனில் கிடைக்கும் புதிய எண் = $\frac{100 \pm Y}{100} \times x$

$x$ ஆனது $y$ஐ விட $a\%$ அதிகம் எனில் $y$ ஆனது $x$ ஐ விட $\frac{a}{100+a} \times 100$ % குறைவு.

$x$ ஆனது $y$ ஐ விட $a\%$ குறைவு எனில், $y$ ஆனது $x$ ஐ விட $\frac{a}{100-a} \times 100$ % அதிகம்.

**சதவீதத்தின் பின்ன வடிவம் :**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 50% | = | $\frac{1}{2}$, | 20% | = | $\frac{1}{5}$, | 12.5% | = | $\frac{1}{8}$ |
| $33\frac{1}{3}\%$ | = | $\frac{1}{3}$, | $16\frac{2}{3}\%$ | = | $\frac{1}{6}$, | $11\frac{1}{9}\%$ | = | $\frac{1}{9}$ |
| 25% | = | $\frac{1}{4}$, | $14\frac{2}{7}\%$ | = | $\frac{1}{7}$, | 10% | = | $\frac{1}{10}$ |

❖ ஓர் எண்ணானது முதலில் $a\%$ அதிகரிக்கபட்டு பின்பு $a\%$ குறைக்கப்படுகிறது எனில் கிடைக்கும் மதிப்பானது கண்டிப்பாக அந்த எண்ணை விடக் குறைவாக இருக்கும். இதனை $\left(\frac{a^2}{100}\right)\%$ **அல்லது** $\left(\frac{a}{10}\right)^2\%$ என எழுதலாம்

✍ ஓர் எண்ணானது முதலில் $a$ % அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது. பின்பு கிடைத்த மதிப்பானது மேலும் $b$ % அதிகரிக்கப்படுகிறது அல்லது குறைக்கப்படுகிறது எனில், கிடைக்கும் மதிப்பு = $\pm a \pm b + \frac{(\pm a)(\pm b)}{100}$ %

(இங்கு அதிகரிக்கப்படும் போது $+$, குறைக்கப்படும் போது $-$ என பயன்படுத்த வேண்டும்)

## மாதிரி கணக்குகள்

1. ரூபாய் 2000 - ல் 25% என்பது எவ்வளவு ரூபாய்?

a) ரூ. 400  b) ரூ. 450

**c) ரூ. 500**  d) ரூ. 550

**Solution**

25% என்பதை $\frac{25}{100}$ என்று எழுதலாம்

$\frac{25}{100} \times 2000 = 500$

---

2. 640ல் 20% + 200 ல் 21% = ?

a) 110  b) 130  c) 160  **d)170**

**Solution**

20% என்பதை $\frac{20}{100}$ என்று எழுதலாம்

21% என்பதை $\frac{21}{100}$ என்று எழுதலாம்

$\left(640 \times \frac{20}{100}\right) + \left(200 \times \frac{21}{100}\right) = ?$

128 + 42 = 170

> **சுருக்குக – கணக்குகளில் 'ல்' என்றால் $'\times'$ என்று பொருள்**

---

3. $\frac{2}{3}$ of 10% of 60% of A என்பது 32 எனில் A ன் மதிப்பு காண்க.

a) 750  b) 600  **c) 800**  c) 1250

**Solution**

$A \times \frac{2}{3} \times \frac{10}{100} \times \frac{60}{100} = 32$

$A = \frac{32\times100\times100\times3}{2\times10\times60} = 800$

> of என்றால் (பெருக்கல்) என்று பொருள்
>
> 10% என்பதை $\frac{10}{100}$ என்று எழுத வேண்டும்

---

4. ஒரு எண்ணிலிருந்து அந்த எண்ணின் 40% - ஐ கழிக்க, மீதியானது 30 கிடைக்கிறது எனில் அந்த எண்?

a) 28  **b) 50**

c) 52  d) 70

**Solution**

$x - x \times \frac{40}{100} = 30$

BODMAS விதிப்படி எடுத்துக்கொள்ள வேண்டும்

$x - x \times \frac{2}{5} = 30$

$\frac{x}{1} - \frac{2x}{5} = 30$

மீ.சி.ம காண வேண்டும் = 5

$\frac{5x}{5} - \frac{2x}{5} = 30$

$\frac{5x-2x}{5} = \frac{3x}{5} = 30$

$3x = 150$

$x = \frac{150}{3} \rightarrow x = 50$

---

5. ஒரு கடைக்காரர் குறிப்பிட்ட பழங்களை வாங்கினார். அதில் 40% பழத்தை விற்றுவிட்டார் அவரிடம் மீதம் 420 பழங்கள் உள்ளன எனில் அவர் வாங்கிய பழங்கள் எத்தனை?

a) 588  b) 600

c) 672  **d) 700**

**Solution**

கடைக்காரர் முதலில் வாங்கியிருந்த பழத்தை 100% என்க

இருந்த பழங்கள் = 100%, விற்ற பழங்கள் = 40%


மீதம் உள்ள பழங்கள் = வாங்கிய பழங்கள் - விற்ற பழங்கள்

= 100% - 40% = 60%

$= \frac{420}{60} \times 100 = 700$

# QUANTITATIVE APTITUDE

# இயற்கணிதம்



| **n** | **2** | **3** | **4** | **5** | **- 4** |
|---|---|---|---|---|---|
| $\boldsymbol{If, x + \left(\frac{1}{x}\right) = n}$ | $x + \left(\frac{1}{x}\right) = 2$ | $x + \left(\frac{1}{x}\right) = 3$ | $x + \left(\frac{1}{x}\right) = 4$ | $x + \left(\frac{1}{x}\right) = 5$ | $x + \left(\frac{1}{x}\right) = -4$ |
| Then, $x^2 + \left(\frac{1}{x}\right)^2 = n^2 - 2$ | 2 | 7 | 14 | 23 | 14 |
| Then, $x^3 + \left(\frac{1}{x}\right)^3 = n^3 - 3n$ | 2 | 18 | 52 | 110 | - 52 |
| Then, $x^4 + \left(\frac{1}{x}\right)^4 = (n^2 - 2)^2 - 2$ | 2 | 47 | 194 | 527 | 194 |
| Then, $x^5 + \left(\frac{1}{x}\right)^5 = (n^2 - 2) \times (n^3 - 3n) - n$ | 2 | 124 | 726 | 2528 | - 730 |
| Then, $x^6 + \left(\frac{1}{x}\right)^6 = (n^3 - 3n)^2 - 2$ | 2 | 322 | 2702 | 12098 | 2702 |
| Then, $x^7 + \left(\frac{1}{x}\right)^7 = (n^3 - 3n) \times [(n^2 - 2)^2 - 2] - n$ | 2 | 844 | 10086 | 57968 | - 10090 |
| $x - \frac{1}{x} = \sqrt{(n^2 - 4)}$ | 0 | $\sqrt{5}$ | $\sqrt{12}$ | $\sqrt{21}$ | $\sqrt{12}$ |

| **n** | **2** | **3** | **4** | **5** | **- 4** |
|---|---|---|---|---|---|
| $\boldsymbol{If, x - \left(\frac{1}{x}\right) = n}$ | $x - \left(\frac{1}{x}\right) = 2$ | $x - \left(\frac{1}{x}\right) = 3$ | $x - \left(\frac{1}{x}\right) = 4$ | $x - \left(\frac{1}{x}\right) = 5$ | $x - \left(\frac{1}{x}\right) = -4$ |
| Then, $x^2 + \left(\frac{1}{x}\right)^2 = n^2 + 2$ | 6 | 11 | 18 | 27 | 18 |
| Then, $x^3 - \left(\frac{1}{x}\right)^3 = n^3 + 3n$ | 14 | 36 | 76 | 140 | - 76 |
| Then, $x^4 + \left(\frac{1}{x}\right)^4 = (n^2 - 2)^2 + 2$ | 34 | 119 | 322 | 727 | 322 |
| Then, $x^5 - \left(\frac{1}{x}\right)^5 = (n^2 + 2) \times (n^3 + 3n) - n$ | 82 | 394 | 1366 | 3778 | - 1370 |
| Then, $x^6 + \left(\frac{1}{x}\right)^6 = (n^3 + 3n)^2 - 2$ | 194 | 1294 | 5774 | 19598 | 5774 |
| Then, $x^7 - \left(\frac{1}{x}\right)^7 = (n^3 + 3n) \times [(n^2 + 2)^2 - 2] - n$ | 474 | 4282 | 24470 | 101778 | - 24474 |
| $x + \frac{1}{x} = \sqrt{(n^2 + 4)}$ | $\sqrt{8}$ | $\sqrt{13}$ | $\sqrt{20}$ | $\sqrt{29}$ | $\sqrt{20}$ |

**இயற்கணிதச் சூத்திரங்கள்:**

- ★ $(a + b)^2 = a^2 + 2ab + b^2$
- ★ $(a - b)^2 = a^2 - 2ab + b^2$
- ★ $a^2 - b^2 = (a + b)(a - b)$
- ★ $(a + b)^2 + (a - b)^2 = 2(a^2 + b^2)$
- ★ $(a + b)^2 - (a - b)^2 = 4ab$
- ★ $a^3 + b^3 = (a + b)(a^2 - ab + b^2)$
- ★ $a^3 - b^3 = (a - b)(a^2 + ab + b^2)$
- ★ $(a + b + c)^2 = a^2 + b^2 + c^2 + 2(ab + bc + ac)$
- ★ $(a^3 + b^3 + c^3 - 3abc) = (a + b + c)(a^2 + b^2 + c^2 - ab - bc - ca)$
- ★ $a^3 + b^3 + c^3 = 3abc, \ if \ (a + b + c = 0)$

## மாதிரி கணக்குகள்

1. $kx + 2y = 5\ ;\ 3x + y = 1$ எனும் சமன்பாடுகளுக்கு தீர்வு இல்லாத நிலையில், k ன் மதிப்பு?

a) k = 3  **b) k = 6**
c) k ≠ 6  d) k = 4

**தீர்வு:–**

சமன்பாடுகளின் தொகுப்பிற்குத் தீர்வு ஏதுமில்லை எனில்,

$$\frac{a_1}{a_2} = \frac{b_1}{b_2} \neq \frac{c_1}{c_2}$$

சமன்பாட்டின் வடிவம் $a_1x + b_1y = c_1$

இங்கு $a_1 = k, b_1 = 2, a_2 = 3, b_2 = 1$

$\frac{k}{3} = \frac{2}{1} \Rightarrow k = 2 \times 3 = 6$

எனில் $k$ ன் மதிப்பு 6 ஆகும்.

$\frac{a_1}{a_2} \neq \frac{b_1}{b_2}$ எனில் ஒரேயொரு தீர்வு மட்டும் பெற்றிருக்கும் (ஒருங்கமைவுடையது)

$\frac{a_1}{a_2} = \frac{b_1}{b_2} = \frac{c_1}{c_2}$ எனில் எண்ணற்ற தீர்வுகள் இருக்கும் (ஒருங்கமைவுடையது)

$\frac{a_1}{a_2} = \frac{b_1}{b_2} \neq \frac{c_1}{c_2}$ எனில் தீர்வு இல்லை. ஒருங்கமைவற்றது)

$ax^2 + bx + c = 0,\ a \neq 0$ என்ற இருபடிச் சமன்பாட்டின். மூலங்களின் கூடுதல்

$$\alpha + \beta = \frac{-b}{a}$$

$$= \frac{-x \text{-யின் கெழு}}{x^2 \text{-யின் கெழு}}$$

மூலங்களின் பெருக்கற்பலன்

$$\alpha\beta = \frac{c}{a} = \frac{\text{மாறிலி உறுப்பு}}{x^2 \text{-யின் கெழு}}$$

$\alpha, \beta$ -வை மூலங்களாக உடைய இருபடிச் சமன்பாடு

$$x^2 + (\alpha + \beta)x + \alpha\beta = 0$$

2. $x + \frac{1}{x} = 8$ எனில் $x + \frac{1}{x} = ?$

**(a) 62**  (b) 66  (c) 64  (d) 72

**தீர்வு:–**

$x + \frac{1}{x} = a,$ எனில் $x^2 + \frac{1}{x^2} = a^2 - 2$

$= 64 - 2 = 62$

3. $x - \frac{1}{x} = 2\sqrt{2}$ **எனில்** $x^2 + \frac{1}{x^2}$ **என்ன?**

(a) 12  **(b) 10**  (c) 16  (d) 11

**தீர்வு:–**

$x - \frac{1}{x} = 2\sqrt{2}$

$x^2 + \frac{1}{x^2} = a^2 + 2$

$= (2\sqrt{2})^2 + 2$

$= 8 + 2 = 10$

4. $a^2 - 4a + 1 = 0$ **எனில்** $a^2 + \frac{1}{a^2} = ?$

**(a) 14**  (b) 16  (c) 18  (d) 12

**தீர்வு:–**

$a^2 - 4a + 1 = 0$

**a ஆல் வகுக்கவும்.**

$a - 4 + \frac{1}{a} = 0$

$a + \frac{1}{a} = 4$

$a^2 + \frac{1}{a^2} = a^2 - 2$

$= 4^2 - 2 = 14$

5. $x - \frac{2}{x} = 15$ எனில் $x^2 + \frac{4}{x^2} = ?$

(a) 114  (b) 160  **(c) 229**  (d) 412

**தீர்வு:–**

$\left(x - \frac{2}{x}\right)^2 = 15^2$

$x^2 + \frac{4}{x^2} - 2 \times x \times \frac{2}{x} = 225$

$x^2 + \frac{4}{x^2} = 229$

6. $x+\frac{1}{x}=2$ எனில் $x^{91}+\frac{1}{x^{91}}=?$

**(a) 2** (b) 0 (c) 91 (d) 182

**தீர்வு:-**

$x+\frac{1}{x}=2$ எனில் $x^n+\frac{1}{x^n}=2$

(Where n = 1)

$x^{91}+\frac{1}{x^{91}}=2$

---

7. $x=\sqrt{2}-\sqrt{3}$ எனில் $\sqrt{2}$ என்பது?

a) $\frac{1}{2}\left(x+\frac{1}{x}\right)$ b) $\frac{1}{2}\left(x-\frac{1}{x}\right)$

c) $\frac{1}{2}\left(\frac{1}{x}-x\right)$ d) $x-\frac{1}{x}$

**தீர்வு:-**

$x=\sqrt{2}-\sqrt{3}$, எனில்

$\frac{1}{x}=-(\sqrt{2}+\sqrt{3})\ (or)(-\sqrt{2}-\sqrt{3})$

$\left(x-\frac{1}{x}\right)=(\sqrt{2}-\sqrt{3})-(-\sqrt{2}-\sqrt{3})$

$\left(x-\frac{1}{x}\right)=\sqrt{2}-\sqrt{3}+\sqrt{2}+\sqrt{3}$

$\left(x-\frac{1}{x}\right)=2\sqrt{2}$

$\frac{1}{2}\left(x-\frac{1}{x}\right)=\sqrt{2}$

$\sqrt{a}-\sqrt{b}$
$\sqrt{a}<\sqrt{b}=-(\sqrt{a}+\sqrt{b})$
$\sqrt{a}>\sqrt{b}=\sqrt{a}+\sqrt{b}$

---

8. $x+\frac{1}{x}=2\sqrt{2}$ எனில் $x-\frac{1}{x}$ - ன் மதிப்பு காண்க.

a) $\sqrt{2}$ b) $2\sqrt{2}$

c) 2 d) 4

**தீர்வு:-**

$x+\frac{1}{x}=2\sqrt{2}$ (இரு புறமும் வர்க்கப்படுத்த)

$$\left(x+\frac{1}{x}\right)^2=(2\sqrt{2})^2$$

$$x^2+\frac{1}{x^2}+2\times x\times\frac{1}{x}=4\times 2$$

$$x^2+\frac{1}{x^2}+2=8$$

$$x^2+\frac{1}{x^2}=6\rightarrow(1)$$

இதே போன்று

$$\left(x-\frac{1}{x}\right)^2=x^2+\frac{1}{x^2}-2\times x\times\frac{1}{x}$$

$=x^2+\frac{1}{x^2}-2$ (1-ன் மதிப்பை பிரதியிட)

$=6-2$

$\left(x-\frac{1}{x}\right)^2=4$ ; $\left(x-\frac{1}{x}\right)=\sqrt{4}=2$

---

9. $x=2+\sqrt{5}$ எனில் $x^3+x^{-3}$

(a) $40\sqrt{5}$ **(b) $34\sqrt{5}$**

(c) $46\sqrt{5}$ (d) $36\sqrt{5}$

**தீர்வு:-**

$$x^3+x^{-3}=x^3+\frac{1}{x^3}$$

$$\frac{1}{x}=\frac{1}{2+\sqrt{5}}\times\frac{2-\sqrt{5}}{2-\sqrt{5}}$$

$$=\frac{2-\sqrt{5}}{4-5}$$

$$\frac{1}{x}=\sqrt{5}-2$$

$$x+\frac{1}{x}=2+\sqrt{5}+\sqrt{5}-2$$

$$=2\sqrt{5}$$

$$x^3+\frac{1}{x^3}=a^3-3a$$

$$=(2\sqrt{5})^3-3\times 2\sqrt{5}$$

$$=40\sqrt{5}-6\sqrt{5}$$

$$=34\sqrt{5}$$

---

9. $x+\frac{1}{x}=7$ எனில் $x^3+\frac{1}{x^3}=?$

**(a) 322** (b) 332 (c) 342 (d) 312

**தீர்வு:-**

$$x+\frac{1}{x}=a,$$

$$x^3+\frac{1}{x^3}=a^3-3a$$

$$=7^3-3\times 7$$


$$=343-21$$

$$=322$$

---

# QUANTITATIVE APTITUDE

# அளவியல்



★ அளவீடுகள் பகுதியில் பரப்பளவு, சுற்றளவு, கனஅளவு (கொள்ளளவு) மற்றும் மூலைவிட்டம் போன்ற அளவுகளைக் கண்டுபிடிப்பது பற்றி காணப்போகிறோம். அளவீடுகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

அவை: 1. சமதள உருவங்கள்
2. கன உருவங்கள்

**சமதள உருவங்கள்:**

★ சதுரம், செவ்வகம், வட்டம் மற்றும் முக்கோணம் ஆகிய உருவங்கள் சமதள உருவங்கள் ஆகும். இந்த உருவங்களுக்கு பரப்பளவு, சுற்றளவு மற்றும் மூலைவிட்டம் போன்றவை கண்டறிய இயலும். ஆனால் அவற்றின் கொள்ளளவு காண இயலாது.

**கனஉருவங்கள்:**

★ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சமதள உருவங்களுடைய இணைப்பே கன உருவங்கள் ஆகும். கனசதுரம், கனசெவ்வகம், கூம்பு, உருளை, கோளம், மற்றும் இடைக்கண்டம் போன்ற உருவங்கள் கனஉருவங்கள் ஆகும். இவற்றிற்கு கொள்ளளவு (கனஅளவு), பரப்பளவு மற்றும் சுற்றளவு போன்றவை கண்டறிய இயலும்.

**பரப்பளவு :**

★ ஒரு பொருளின் ஒரு சமதளப்பகுதியில் அடைக்கும் இடத்தின் அளவு அப்பொருளின் பரப்பளவு எனப்படும்.

**சுற்றளவு :**

★ ஒரு மூடிய வடிவத்தின் எல்லையின் மொத்த நீளம் அதன் சுற்றளவு எனப்படும்.

**அளவீடுகளைப் பற்றி முக்கியமான குறிப்புகள்:**

- ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் $180^\circ$ ஆகும்.
- வட்ட மையத்தின் வழியே செல்லும் நாண் விட்டம் எனப்படும்.
- வட்டத்தின் மையக் கோணம் $360^\circ$ ஆகும்.
- அரைவட்டத்தின் மையக் கோணம் $180^\circ$
- அரைவட்டத்தின் மீது அமையும் கோணம் செங்கோணம் ஆகும்.
- கால் வட்டத்தின் மையக் கோணம் $90^\circ$ ஆகும்.
- நாற்கரம் என்பது ஒழுங்கற்றது.
- இணைகரத்தில் எதிர்பக்கங்கள் இணையாகவும், எதிர் கோணங்கள் சமமாகவும் காணப்படும்.

பல கோணத்தில் உட்கோணங்களின் கூடுதல் $= (n-2) \times 180^\circ$

($n -$ பக்கங்களின் எண்ணிக்கை)

சுழல் சமச்சீர் வரிசை $= \frac{360}{\theta}$ ($\theta$ = சுழற்சி கோணம்)


## அளவீடுகள் சூத்திரங்கள்

**1. சதுரம்**


சதுரத்தின் பரப்பளவு = $a^2$ **ச. அலகுகள்**

சதுரத்தின் சுற்றளவு = $4a$

மூலைவிட்ட அளவு = $a\sqrt{2}$




**2. செவ்வகம்**





செவ்வகத்தின் பரப்பளவு = $l \times b$ **ச. அலகுகள்**

செவ்வகத்தின் சுற்றளவு = $2 \times (l + b)$

செவ்வகத்தின் மூலைவிட்டம் $d = \sqrt{l^2 + b^2}$


**3. முக்கோணம்**




முக்கோணத்தின் பரப்பளவு = $\frac{1}{2} \times b \times h$ **ச. அலகுகள்**

முக்கோணத்தின் சுற்றளவு = $AB + BC + CA$

**4. செங்கோண முக்கோணம்**





செங்கோண முக்கோணத்தின் பரப்பளவு = $\frac{1}{2} \times b \times h$ **ச. அலகுகள்**

செங்கோண முக்கோணத்தின் சுற்றளவு =

**(அடிப்பக்கம் + உயரம் + கர்ணம்)**

**5. சமபக்க முக்கோணம்**




சமபக்க முக்கோணத்தின் பரப்பளவு = $\frac{\sqrt{3}}{4} a^2$ **ச. அலகுகள்**


சமபக்க முக்கோணத்தின் சுற்றளவு = $AB + BC + CA = 3a$

சமபக்க முக்கோணத்தின் செங்குத்து உயரம் $h = \frac{\sqrt{3}}{2} a$ **அலகுகள்**

**6. இருசமபக்க முக்கோணம்**

இருசமபக்க முக்கோணத்தின் பரப்பளவு = $h\sqrt{a^2 - h^2}$ ச. அலகுகள்

இருசமபக்க முக்கோணத்தின் சுற்றளவு = $2a + 2\sqrt{a^2 - h^2}$





**7. அசமபக்க முக்கோணம்**

அசம பக்க முக்கோணத்தின் பரப்பளவு = $\sqrt{s(s-a)(s-b)(s-c)}$

$$S = \frac{a+b+c}{2}$$

அசம பக்க முக்கோணத்தின் சுற்றளவு = AB + BC + CA = (a+b+c)





**8. சாய்சதுரம்**

$d_1, d_2$ ஆகியன மூலைவிட்டங்கள் எனில்

சாய்சதுரத்தின் பரப்பளவு = $\frac{1}{2} \times d_1 \times d_2$ ச. அலகுகள்


சாய்சதுரத்தின் சுற்றளவு = 4a




**9. இணைகரம்**

இணைகரத்தின் பரப்பளவு = $b \times h$ ச. அலகுகள்


இணைகரத்தின் சுற்றளவு = $2 \times (a + b)$




**10. சரிவகம்**


பரப்பளவு = $\frac{1}{2} \times h \times (a + b)$ ச. அலகுகள்

சுற்றளவு = $AB + BC + CD + DA$



QUANTITATIVE APTITUDE

# நிகழ்தகவு



★ நிகழ்தகவு என்பது (Probability) ஒரு நிகழ்ச்சி நிகழவள்ள வாய்ப்பின் அளவாகும்.
★ ஒரு உறுதியான நிகழ்ச்சியின் நிகழ்தகவு = **1**
★ ஒரு உறுதியற்ற நிகழ்ச்சியின் நிகழ்தகவு = **0** (நடைபெறாத நிகழ்ச்சி)
★ எந்த ஒரு நிகழ்ச்சியின் நிகழ்தகவும் எதிர்மறையில் (Negative) வராது.
**எ.கா.:** - 1, - 2
★ **n (S)** என்பது கூறுவெளியின் கணத்திலுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
★ **n (E)** என்பது நிகழ்ச்சி கணத்திலுள்ள உறுப்புகளின் எண்ணிக்கை
★ **P (E)** என்பது நிகழ்ச்சி E - யின் நிகழ்தகவு

✍ A என்ற ஏதேனும் ஒரு நிகழ்ச்சிக்கான நிகழ்தகவு 0 - க்கும் 1 - க்கும் இடையில் அமையும், அல்லது 0 ஆகவோ அல்லது 1 ஆகவோ அமையும்.
அதாவது, $0 \leq P(A) \leq 1$

✍ உறுதியான நிகழ்ச்சியின் நிகழ்தகவு ஒன்று ஆகும். அதாவது $P(S) = 1$

✍ நடக்க இயலா நிகழ்ச்சியின் நிகழ்தகவு பூச்சியம் ஆகும். அதாவது $P(\emptyset) = 0$

✍ A என்ற நிகழ்ச்சி நடைபெறாமல் இருப்பதற்கான நிகழ்தகவு

$P$ (A அல்ல) = $P(\bar{A})$ அல்லது $P(A') = \frac{n-m}{n} = \frac{n}{n} - \frac{m}{n}$

$$\Rightarrow P(\bar{A}) = 1 - \frac{m}{n} = 1 - P(A)$$

✍ $P(A) + P(\bar{A}) = 1$ [$P(\bar{A})$ – என்பது நிகழச்சி A - யின் நிரப்பு நிகழ்ச்சியாகும்]

**நாணயம்:**

கூறுவெளியின் எண்ணிக்கை n (S) = $2^n$

2 என்பது நாணயத்தின் பக்கங்கள் - $n$ என்பது நாணயத்தின் எண்ணிக்கை

★ ஒரு நாணயத்தை சுண்டும் போது கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $2^1$ = 2.
S = {H, T}
★ இரு நாணயங்களை சுண்டும் போது கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $2^2$ = 4.
S = {HH, HT,TH,TT}
★ மூன்று நாணயங்களை சுண்டும் போது கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $2^3$ = 8.
S = {HHH, HHT, HTH, THH, TTT, TTH, THT, HTT}

✍ நாணயத்தின் பக்கங்களை அடிமானமாகவும் (Base), அதன் எண்ணிக்கையை அடுக்காகவும் (Power) எழுத வேண்டும்.
**எ.கா.:** 3 நாணயங்களை ஒருமுறை சுண்டுதல் ($2^3$)

**பகடை:**

கூறுவெளியின் எண்ணிக்கை n (S) = $6^n$

6 என்பது பகடையின் பக்கங்கள், $n$ என்பது பகடையின் எண்ணிக்கை

★ ஒரு பகடை உருட்டப்படும்போது கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $6^1 = 6$

S = {1, 2, 3, 4, 5, 6}

★ இரு பகடைகள் உருட்டப்படும் போது கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $6^2$ = 36.

$$S = \left\{\begin{matrix} (1,1) & (1,2) & (1,3) & (1,4) & (1,5) & (1,6) \\ (2,1) & (2,2) & (2,3) & (2,4) & (2,5) & (2,6) \\ (3,1) & (3,2) & (3,3) & (3,4) & (3,5) & (3,6) \\ (4,1) & (4,2) & (4,3) & (4,4) & (4,5) & (4,6) \\ (5,1) & (5,2) & (5,3) & (5,4) & (5,5) & (5,6) \\ (6,1) & (6,2) & (6,3) & (6,4) & (6,5) & (6,6) \end{matrix}\right\}$$

★ மூன்று பகடைகள் உருட்டப்படும் போது கிடைக்கும் கிடைக்கும் வாய்ப்புகளின் எண்ணிக்கை = $6^3$ = 216.

**சீட்டுக்கட்டு:**

★ மொத்த சீட்டுகள் n (S) = 52

★ கருப்பு நிறச்சீட்டுகள் = 26:

★ ஸ்பேடு (Spade) = 13, க்ளவர் (Clever) = 13

★ சிவப்பு நிறச் சீட்டுகள் = 26:

★ ஹார்ட் (Heart) = 13, டைமண்ட் (Diamond) = 13

★ படம் (Picture) அட்டைகள் = (A, J, Q, K) = 4 × 4 = 16

★ எண் (Numbers) அட்டைகள் = (2, 3, ....10) = 9 × 4 = 36

- உட்கணங்கள் A மற்றும் B ஆகியனவற்றை ஒரு சமவாய்ப்புச் சோதனையில் A மற்றும் B என்ற நிகழ்ச்சிகளை ஒன்றையொன்று விலக்கா நிகழ்ச்சிகளாக கருதினால் $P(A \cup B) = P(A) + P(B) - P(A \cap B)$ எனக் கிடைக்கும்.
  இங்கு $P(A \cap B)$ என்பது நிகழச்சி A, B யில் உள்ள பொதுவான எண்களை குறிக்கும்.
- இம்முடிவே நிகழ்தகவின் கூட்டல் தேற்றமாகும்.
- A - யும் B - யும் ஒன்றையொன்றும் விலக்கும் நிகழ்ச்சிகள் எனில், $P(A \cap B) = \emptyset$ ஆகும்.
  $P(A \cup B) = P(A) + P(B)$ எனவே, ஏனெனில், $P(A \cap B) = 0$
- A, B, C என்பன கூறுவெளி S ஐ சார்ந்த ஏதேனும் மூன்று நிகழ்ச்சிகள் எனில்,
  $P(A \cup B \cup C) = P(A) + P(B) + P(C) - P(A \cap B) - P(B \cap C) - P(A \cap C) + P(A \cap B \cap C)$
- **நிரப்பு நிகழ்ச்சிகளின் வெட்டுக்கணம்**

$$P(A \cap \overline{B}) = P(A) - P(A \cap B)$$
$$P(\overline{A} \cap B) = P(B) - P(A \cap B)$$


நிகழ்தகவின் கூட்டல் தேற்றம் P(A∪B) = P(A) + P(B) - P(A∩B)

✓ இரு நிகழ்ச்சிகளுக்கு இடையே **அல்லது** வந்தால் இந்த இரு நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகளை கூட்ட வேண்டும்.

✓ இரு நிகழ்ச்சிகளுக்கு இடையே **மற்றும்** வந்தால் இந்த இரு நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகளை பெருக்க வேண்டும்.

# QUANTITATIVE APTITUDE

# புள்ளியியல்



★ அட்டவணைகள், விளக்கப்படங்கள், வரைபடங்கள் ஆகியன அனைத்துப் புள்ளி விவரங்களையும் தொகுத்து அவற்றின் உட்கருத்தை. பகுப்பாய்வு செய்வதற்குப் பலப் புள்ளி விவர அளவைகளைப் பயன்படுத்துகிறோம்.

## சராசரியின் வகைகள்

★ மைய நிலைப் போக்கினை அளப்பதற்குப் பலவகையான சராசரிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவைகள் முறையே;

- கூட்டுச்சராசரி (Arithmetic mean)
- பெருக்கல் சராசரி (Geometric mean)
- இசைச் சராசரி (Hormonic mean)
- இடைநிலை (Median)
- முகடு (Mode)

### கூட்டுச்சராசரி (Arithmetic mean)

★ கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் எல்லா மதிப்புகளையும் கூட்டி விவரங்களின் எண்ணிக்கையால் வகுக்கக் கிடைப்பது சாதாரண கூட்டுச் சராசரி மதிப்பு ஆகும்.

### பெருக்கல் சராசரி (Geometric mean)

★ 'n' உறுப்புகளைக் கொண்ட தொகுதியின் பெருக்கல் சராசரி அந்த 'n' உறுப்புகளின் பெருக்கல் தொகையின் 'n' ஆவது வர்க்க மூலம் ஆகும். $X_1$, $X_2$, $X_3$.....$X_n$ என்பது 'n' உறுப்புகளைக் கொண்ட தொகுதி எனில்,

$$\text{பெருக்கல் சராசரி (G.M)} = \sqrt[n]{X_1.X_2.X_3 \dots .X_n}$$

### இசைச் சராசரி (Harmonic mean)

★ இசைச் சராசரி என்பது கொடுக்கப்பட்ட விவரங்களின் தலைகீழ் மதிப்புக்களின் சராசரியின் தலைகீழ் மதிப்பாகும்.

**கூட்டு சராசரி > பெருக்கல் சராசரி > இசைச் சராசரி**

### இடைநிலை (Median)

★ ஏறுவரிசை அல்லது இறங்கு வரிசையில் அமைக்கப்பட்ட ஒரு தொகுதியின் நடுவில் அமையப் பெற்ற மதிப்பு இடைநிலை ஆகும்.

### முகடு (Mode)

★ ஒரு தனித் தொகுதியில் எந்த மதிப்பானது மிகவும் அதிக முறை இடம் பெற்றிருக்கின்றதோ அதுவே முகடு ஆகும்.

★ ஒரு தனித் தொகுதியில் எந்த ஒரு மதிப்பும் திரும்ப இடம் பெறவில்லை எனில் அந்த புள்ளி விவரத்திற்கு முகடு இல்லை.

முகடு, இடைநிலை, கூட்டுச்சராசரி ஆகியவற்றுக்கு இடையே உள்ள தொடர்பு.

முகடு = (3 × இடை நிலை) − (2 × கூட்டுச்சராசரி)